1973 மார்ச் 31]

Scholarships for Students

* 316 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether talented students from rural areas are given scholarships to enable them to prosecute their High School studies; and

(b) if so, the details thereof?

மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களில் உள்ள திறமை மிக்க மாணவர்கள் தங்களுடைய உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொடர இயலும் வகையில் அவர்களுக்குப் படிப்புதவித் தொகை கொடுக்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மத்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி IX, X, XI வகுப்புகளில் படிக்கும் தலைசிறந்த கிராமப்புற மாணவர்களுக்கு, இடைநிலைக் கல்வி முடியுமட்டும், படிப்பு உதவித் தொகை வழங்கப் படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஆண்டு ஒன்றுக்கு, இரு மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புற மாணவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க் கப்பட்டு கல்வி பயில வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 வீதம் வீடுகளிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கும், ரூ. 1,000 வீதம் விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு இரண்டு மாணவர்கள் என்று தேர்ந்தெடுத்து, சிறப்புப் படிப்பு உதவித் தொகை கொடுப்பதற்கு நன்றி. ஆனால் அவர்கள் ஏன் குறிப்பிட்ட சில பள்ளிகளில் தான் படிக்க வேண்டுமென்று கல்வி இலாகா இயக்குநர் அவர்கள் தேர்ந் தெடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு வீட்டுக்குப்

பக்கத்தில் நல்ல உயர்நிலைப் பள்ளிகள் இருக்கிறபொழுது, அதில் படிக்க முடியாது என்று தூரத்தில் இருக்கும் பள்ளிகளில் படிக்க வேண்டுமென்று சொல்லுவதில், அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிற படியால், இந்தப் பள்ளிகளில் தான் படிக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசாங்கம் நீக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில பள்ளிகளில்தான் படிக்க வேண்டும் என்றால், குறிப்பிட்ட சில பள்ளிகளில் தான் வசதி, வாய்ப்புகள் எல்லாம் இருக்க முடியும், நல்ல நிலைமைகளும் இருக்க முடியும். அவர்கள் மேலும் மேலும் தங்களுடைய அறிவாற்றலைப் பெருக்கக்கூடிய வாய்ப்பு வசதி இருக்க முடியும் என்ற காரணத்தால், சிலபல பள்ளிகளைப் பொறுக்கி அந்தப் பள்ளிகளில் உதவித் தொகையோடு படித்தால் நலம் பயக்கும். இல்லாவிட்டால், உதவித் தொகை தந்தும் கூட, வாய்ப்புகள் இல்லாத பள்ளிகளில் படிப்பதன் மூலம் அவர்களுடைய அறிவாற்றலை மேலும் பெருக்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே என்ற காரணத்தால், அவர்களுடைய விருப்பப்படி இல்லாமல் உதவித் தொகை இருப்பதால் இதைப் பயன்படுத்தி படிக்க வாய்ப்பு ஏற்படும் முறையில் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த இலக்கணத்திற்குட்பட்டு இருக்கக்கூடிய பள்ளிகளில் சேர்க்கப்படாமலிருந்தால், சேர்க்கும்படியாக கல்வி இயக்குநரைக் கேட்டுக் கொள்ளலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு மாணவர்கள் என்பது மிகக் குறைவான எண்ணிக்கை இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி மாநிலத்திலுள்ள எல்லா ஒன்றியங்களுக்கும் இந்த உதவி செய்ய அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் வகுத்துத் தருகிற திட்டத்தின் அடிப்படையில் செய்கிறோம். மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் என்றால், எழுநூற்றுச் சில்லரை ஆகிறது. ஆகவே எடுத்த எடுப்பில் அதிகம் கேட்காமல், இந்த ஆண்டு தான் புகுத்தியிருக்கிறார்கள். ஆகவே இது நடைமுறைப்படுத்தப்பட்டதற்குப் பிறகு, படிப்படியாக உயர்த்தும்படி நாம் கேட்டுக்கொள்ளலாம்.

1973 மார்ச் 31]

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொதுவாக "மெரிட்", தகுதி, திறமையின் அடிப்படையிலும் அவர்களுடைய ஏழ்மைத் தன்மை அடிப்படையிலும் கவனிக்கப்படுகிறது.

Incentive Amount for Tamil Medium Students

* 317 *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the students of the American College, Madurai, staged any demonstration demanding payment of incentive money for Tamil medium about October 1972; and

(*b*) if so, the action taken thereon?

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர் களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குமாறு கோரி, மதுரை, அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் அளவில், போராட்டம் ஏதும் நடத்தினரா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட மாணவர் களுக்கு ஊக்குவிப்புத் தொகை 19—10—1972 அன்று வழங்கப் பட்டது.